செய்தி வெளியீடு எண்: 03 நாள்: 03.09.2019.

**தேனி மாவட்டம்,**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் சிறு பழங்கள் சாகுபடி கருத்தரங்கினை துவக்கி வைத்து, 1,105 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், கம்பம் நகராட்சியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் இன்று (03.09.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் சிறு பழங்கள் சாகுபடி கருத்தரங்கினை துவக்கி வைத்து, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கருத்தரங்கில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் அங்கன்வாடியில் பணிபுரியும் 1,065 அங்கன்வாடி பணியாளர்களுக்கு தலா ரூ.10,000/- வீதம் ரூ.1.06 கோடி மதிப்பிலான கைபேசிகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.4.51 இலட்சம் மதிப்பிலான இடுபொருட்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பண்ணைக்குட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பிலான நிதியினையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திர தாளவாடங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.30.00 இலட்சம் மதிப்பிலான இயந்திர தாளவாடங்களையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.1.36 இலட்சம் மதிப்பிலான இடுபொருட்களையும், மீன்வளத்துறையின் சார்பில் அலங்கார மீன் பண்ணை அமைத்தல் மற்றும் மீன் குஞ்சுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.33.10 இலட்சம் மதிப்பிலான நிதியுதவி மற்றும் 13 பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தாது உப்புக்கலவை வழங்கும் திட்டத்தின் கீழ் தாது உப்புகலவை என மொத்தம் 1,105 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழக அரசு தமிழக மக்கள் வாழ்விற்கு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை நீண்ட காலத்திற்கு பயன்தரும் வகையில் தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்களின் பயன் நேரடியாக பொதுமக்களை சென்றடையும் வண்ணம் திறம்பட செயல்படுத்தி வருகிறது.

மனித இனம் செழிக்க, இயற்கை அன்னை தந்த அருட் கொடையாகவும், பூமித்தாய் வழங்கிய வரமாகவும் திகழ்வது பழங்கள் ஆகும். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் பழங்கள் வரலாற்றிலும் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளன. மனிதர்களின் உணர்வில் ஒரு சிறப்பான இடத்தை பெற்றுள்ளன. உண்ணும் உணவின் தரத்தை உயர்த்தி, உடல் வளரவும், உயிர் செழிக்கவும், தேவையான சத்துக்களை அள்ளி வழங்குவது பழங்களே ஆகும். சத்தும், சுவையும் மட்டுமல்ல, ஒவ்வொரு பழத்திற்கும் ஒவ்வொரு விதமான தனித்திறனும் இருக்கிறது.

பழங்கள் இரத்தத்தை சுத்தப்படுத்தும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து தரும், மன அழுத்தத்தை குறைக்கும், ஆரோக்கியமாக வாழவைக்கும், நீண்ட ஆயுள் தரும், நோய்களை குணமாக்கும், மீண்டும் நோய் வராமல் தடுக்கும், நமது உடல் நடத்துக்கு உறுதுணை புரிவதாக பழங்கள் உள்ளன. இத்தனை சத்துக்களையும் மொத்தமாகப் பெற்றதாக சிறுபழங்கள் அமைந்திருக்கின்றன என்ற வேளாண் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சிறுபழங்கள் என்பது மக்களிடம் குறைந்த அளவு பயன்பாட்டிலுள்ள நாவல், அத்தி, விளாம்பழம், பேசன் புரூட், கொடுக்காபுளி, அவகாடோ (வெண்ணெய் பழம்) லிச்சி பழம், இலந்தை பழம் போன்றவை ஆகும்.

பொதுமக்கள் மத்தியில் அதிகம் அறியப்படாத இச்சிறுபழங்கள், பொதுவான மற்ற பழப் பயிர்கள் போன்று, அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுவதில்லை. மாறாக, வீட்டு உபயோகத்திற்காகவும், வெளிச்சந்தைக்காகவும், மிகவும் குறைந்த அளவே தற்போது சாகுபடி செயப்படுகின்றன. இவ்வகை பழங்களின் நன்மைகள் குறித்து மக்களிடம் அதிக விழிப்புணர்வும், புரிதலும் உள்ளது. விவசாயிகளும், இவ்வகை சிறுபழங்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், அதன் முக்கியத்துவம் அறிந்து, சிறு பழங்களை அதிகம் சாகுபடி செய்திட விரும்புகின்றனர்.

இவ்வகைப்பழங்களில், அதிக அளவு நுண்ணூட்ட சத்துக்கள், பல்வகை வைட்டமின்கள் மற்றும் மருத்துவ குணங்கள் உள்ளதால், பண்டைய காலந்தொட்டு, ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவத்தில் இவ்வகை பழங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக நாவல் பழம் மற்றும் நாவல் பழ கொட்டையிலிருந்து செய்யப்படும் பொடி மற்றும் கஷாயம் நீரிழிவு நோய்க்கு, சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. விளாம்பழம் அஜீரண குறைபாட்டை போக்கவல்லது.

இலந்தைப்பழம் வறட்சிப் பகுதிகளில் தானாக வளரும். அதிக உரம் தேவையில்லை, சிறிய அளவு மழை போதும், இதில் கால்சியம், பாஸ்பரஸ் உள்ளது. நினைவாற்றலை அதிகப்படுத்தும் ஆற்றல் கொண்டது. எனவே, மாணவர்களுக்கு சிறந்தது, மேலும், இரத்த அழுத்தம், இருதய நோய் குறைக்க வெகுவாக பயன்படும். வைட்டமின் சி, நார்ச்சத்து மிகுந்து சிவப்பு கொய்யா. புற்று நோய்க்குரிய அபாயத்தை வெகுவாக்கக் குறைக்கும், நீரிழிவினை குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது. சிறந்த மருத்துவ குணங்களைக் கொண்ட அத்திப்பழத்தை உண்டால் ரத்த உற்பத்தி அதிகமாகும்.

சப்போட்டா, திராட்சை, பேரீச்சை ஆகியவற்றில் அதிக புரோட்டீன், இரும்புச்சத்து, பாஸ்பரஸ் ஆகியவை உள்ளன. இவற்றை உட்கொண்டால் எலும்புகள் வலுப்பெறும், தேக ஆரோக்கியத்துடன் வாழ இவை முக்கியம். புற்றுநோய் வராமல் தடுக்கும். கிவி பழம், முதுமையில் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் நல்ல தீர்வு கொடுக்கும். புற்றுநோய்யை வராமல் தடுக்கும். அவகோடா பழம் - பக்கவாதம் வராமல் தடுக்கக்கூடிய சக்தி இதற்கு நிறைய உண்டு. சீத்தாப்பழம் மன அழுத்தத்தைக் குறைக்கக் கூடியது. இதை சாப்பிட்டு வந்தால் சர்க்கரை அளவு கூடாது.

இவ்வகையான சிறு பழங்களைச் சாகுபடி செய்வதற்கு மிகக் குறைந்த அளவே இடுபொருட்கள் தேவைப்படுகின்றன. இப்பயிர்களில் இயற்கையாகவே நோய் மற்றும் பூச்சி தாக்குதலும் மிகக் குறைவாக இருக்கும். ஆதலால் உற்பத்திச் செலவு மிகவும் குறைவு ஆகும். மேலும், இப்பழங்கள் மற்ற வகை பழங்களைவிட அதிக விலைக்கு விற்கப்படுவதால், விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

இவ்வகை பழங்களில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் செய்து வணிக ரீதியாக வருவாய் அதிகம் ஈட்டிட எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக, பேசன் பழத்திலிருந்து பழச்சாறு மற்றும் ஜெல்லியும், அத்திப் பழங்களிலிருந்து உலர் பழங்களும், விளாம் பழங்களிலிருந்து ஜாம் போன்றையும் தயாரித்து, விவசாயிகள் வணிக ரீதியாக அதிக வருவாய் ஈட்டிட முடியும். விவசாயம் என்பது நமக்கு ஒரு தொழில் மட்டும் அல்ல. அது நமது உயிர் போன்றது.

எனவே தான் மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கும் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, உழவர் பெருமக்களை கண்களை இமை காப்பது போல காத்து வந்தார். அம்மாவின் அடிச்சுவட்டில் அம்மா அவர்களது அரசும் விவசாயத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை தொய்வின்றி தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக தமிழ்நாடு கடந்த 8 ஆண்டுகளி வறட்சி பாதித்த இரண்டு வருடங்கள் தவிர, மீதமுள்ள 6 ஆண்டுகளிலும் உணவு தானிய உற்பத்தியில் 100 மெட்ரிக் டன் அளவையும் தாண்டி சாதனை படைத்து, அதற்காக மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினை பெற்றுள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட வேண்டும். அவர்களை ஏழ்மை நிலையிலிருந்து விடுவித்திட வேண்டும். அதற்கேற்ப நவீன தொழில் நுட்ப முறைகளைக் கொண்டு வந்து விவசாயத்தில் புதுமைப்படுத்திட வேண்டும். பருவநிலை மாற்றங்களை சமாளித்து நிலைத்து நிற்கக்கூடிய வகையில், எளிய முறையில், விரைவான மகசூலைச் செய்து, அதிக சாகுபடி மூலம் விவசாயிகள் சிறந்த வருவாய் பெறத் தக்க வகையில், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் நவீன சாகுபடி முறைகளைப் பயன்படுத்துதல், குறித்து விவசாயிகளுக்கு போதிய பயிற்சியை வழங்கவும், திறனை அதிகப்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த அடிப்படையில் தான் குறைந்த செலவில், அதிக மகசூல் மற்றும் வருமானம் கிடைக்கக்கூடிய, இச்சிறு பழங்கள் சாகுபடியில் ஈடுபட்டு, விவசாயிகள் பலன் பெற வேண்டும் என்ற நோக்கிலும், சிறுபழங்கள் சாகுபடி குறித்த விழிப்புணர்வை ஊட்டி, ஊக்குவிக்கும் வகையிலும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் இன்றைய கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையும், அதன் அடிவாரங்களும் சிறு வழங்கள் விளைச்சலுக்கு ஏற்றதாக விளங்குகின்றன என்றும், மக்களால் அதிகம் உண்ணப்படாத அரிய வகை சிறு பழங்களின் உற்பத்தி மையமாகவும் அவை விளங்குகின்றன என்றும் வேளாண் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தின் அமைந்திருக்கும், நமது மாவட்டத்தில் சிறு பழங்கள் சாகுபடி பெருமளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் ஆகும்.

மிதமான வெப்பநிலை நிலவும், தேனி மாவட்டத்தில் இவ்வகை சிறு பழங்கள் சாகுபடிக்கு நல்ல வாய்ப்புள்ளது. விவசாயிகளுக்கு இவ்வகைச் சிறு பழங்கள் சாகுபடி செய்கையில், குறைந்த செலவில் நல்ல மகசூல் பெறவும் அதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் சிறு பழங்கள் சாகுபடியை ஊக்குவிக்க தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.25,000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

*நாம் மேற்கொள்ளகிற விவசாயத்தில் இரசாயண உரங்களைப் பயன்படுத்தாமல், இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, உற்பத்தி செய்தால், நாட்டு மக்களின் உடல் நலம் மட்டுமல்லாமல், மண் வளமும் பாதுகாக்கப்படும் என்பதை நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இத்தருணத்தில் எடுத்துக்கூற விழைகிறேன். தேனி மாவட்ட வேளாண் பெருமக்கள் நல்ல வருவாய், தரக்கூடிய, இவ்வகை சிறு பழங்களை சாகுபடி செய்து, நல்ல வருவாய் ஈட்டி பயன்பெற வேண்டுமென்று என தெரிவித்தார்.*

*இக்கருத்தரங்கில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத்குமார், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், தேனி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் க.ஜெயலட்சுமி கணேசன், உத்தமபாளையம் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் பி.ஆர்.பி.அழகர்ராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, உத்தமபாளையம் சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.பாலசந்தர், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ச.ஜவஹரிபாய், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவ.முத்துகுமாரசுவாமி, தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) அ.ஆறுமுகம், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் த.ஆறுமுகம், பழவியல் துறை பேராசியர் மற்றும் தலைவர் ஜே.ராஜாங்கம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் எப்.ஹெலன்ரோஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.எம்.சையதுகான், ஆர்.பார்த்திபன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***